# சங்க இலக்கியத்தில் வெறியாட்டயர்தல்

**முனைவர் அ.கலைவாணி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்
கோயம்புத்தூர்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** 1

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

முருகனை வழிபடும் மக்கள் வீரத்தன்மை குன்றாவகையில் வழிபாடு செய்தனர். முருகன், அழகன், இளையன், மணம் கொண்டவன், தெய்வத்தன்மை பொருந்தியவன். அதனால் இளம் பெண்களுக்குக் காதல் நோய் கொடுப்பவனாகவும் இருக்கிறான். மலரினும் மெல்லிய காதலைக்கொண்ட மயக்கத்தைப் போக்க முருகன் சார்பில் வேலன் வெறியாட்டு அயர்வான், வீரமும் வெற்றியும் செறிந்த தெய்வத்திற்கு வீரமாய் வழிபாடு செய்வதே முறை என்பதையே வெறியாட்டுப் பற்றிய செய்திகள் உணர்த்துகின்றன.

## வெறியாட்டு

சங்க காலத்தில் குறிஞ்சி நில மக்களிடம் வெறியாட்டு என்னும் கூத்து பெரிதும் பரவியிருந்தது. தெய்வம் மக்கள்மீது வந்து ஆடுவதை ‘வெறியாட்டு’ என்றும் முருகனுக்கு இயல்பான நறுமணத்தை ‘வெறி’ என்றும் கூறுவார். வெறியாட்டில் வழிபடுவோர் தெய்வம் தன் மீது வந்து வெளிப்படும் என்னும் நம்பிக்கையில் கூத்தாடினர் என்பதைத் தொல்காப்பியர்,

**வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**
**வெறியாட் டயர்ந்த காந்தளும் (தொல்.பொருள்.63:1-2)**

என்னும் நூற்பாவில் காட்டுகின்றார். வேலன் என்பவன் வெறியாடலின் இயல்பை உணர்ந்தவன் என்றும் வெறியாட்டிற்குக் காந்தள் என்றொரு பெயரும் உண்டு என்றும் தெளிவாக அறியமுடிகிறது. பழந்தமிழரிடையே முருக வழிபாடு வெறியாட்டுச் சடங்காக இருந்தமையைத் தொகை நூல்களில் பயின்றுவரும் முருக வழிபாடு பற்றிய குறிப்புகள் வழி உணர முடிகின்றது. இவ்வெறியாடல் ‘வெறி’ என்றும் ‘வெறியாடல்’என்றும் ‘வேலனாடல்’ என்றும் சுட்டப்படுகின்றது.

## வெறியாட்டு நடத்தி முருகனை வழிபடும் சூழல்

தலைமக்கள் களவொழுக்கம் நிகழ்த்தும் காலத்தில் தலைவனைக் காணாது தலைவி உடல் மெலிவாள். தலைவியின் உடலில் வேறுபாடு கண்ட தலைவியின் தாய் முருகன் கோயிற் பூசாரி வேலனை அழைத்துத் தலைவியின் நோய்க்குரிய காரணத்தை வினவுவாள். அவ்வேளையில் குறிஞ்சி நிலத் தெய்வம் முருகனே காரணமாதலால் அவனுக்கு விழா எடுத்தால்

தலைவியின் நோய் தீருமென்று கூறி வேலன் முருகனை வழிபடுவாள். சங்க இலக்கியத்தில் முருகனை வழிபடும் இடங்களிலெல்லாம் வெறியாட்டு என்னும் கூத்தே வருணிக்கப்பட்டுள்ளது. தெய்வங்களை அழைக்க வெறியாட்டு நிகழ்த்தும் கட்டுவிச்சியை அழைத்து நல்ல நெடிய குன்றத்தைப் பாடும் பாட்டையே பாட வேண்டும் என்பதாக அமைந்துள்ளது.

**அகவன் மகளே அகவன் மகளே**
**அகவன் மகளே பாடுக பாட்டே**
**இன்னும் பாடுக பாட்டே அவர்**
**நல்நெடுங் குன்றம் பாடிய பாட்டே (குறுந்.23)**

என்னும் பாடல் தெய்வங்களையும் குலத்தோரையும் அழைத்துப் பாடுவதை மரபாகக் கொண்டவள் கட்டுவிச்சியாகிய அகவல் மகள் என்பதையும் அம்மகளிர் பாடல் பாடி வெறியாட்டு நடத்தினர் என்பதையும் புலப்படுத்துகின்றது.

வயலில் முதல் போகமாக விளைந்திருந்த தினைக் கதிரினைத் தெய்வத்திற்குப் படையலிட்டிருந்தபோது, அதனை அறியாது எடுத்து உண்ட மயில் மகிழ்ச்சியுடன் ஆடிய ஆட்டத்தை வெறியாட்டு நிகழ்த்திய கட்டுவிச்சியின் ஆட்டம் போன்று அமைந்ததாக மக்கள் எண்ணிய எண்ணத்தைக் காணுமிடத்து அது முருகனை வழிபடுவதற்குப் படையலிட்டு வெறியாட்டுச் செய்த பழக்கத்தையே சுட்டுவதாக உள்ளது.

**புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்**
**கடிஉண் கடவுட்கு இட்ட செழுங்குரல்**
**அறியாது உண்ட மஞ்ஞை ஆடுமகள்**
**வெறிஉறு வனப்பின் வெய்துற்று நடுங்கும் (குறுந்.105)**

என்னும் இப்பாடல் மயில் ஆடியதை தெய்வத்திற்குப் படைக்கப்பட்டதை உண்டமையால் தெய்வம் மயிலை வருத்திற்று அதனால் அது நடுக்குற்றது என்று கூறுவதைக் காணுமிடத்து தெய்வத்திற்கிட்டதைத் தெய்வம்தான் உண்ணவேண்டும் அது உண்ணும் என்னும் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதை விளக்குகின்றது.

## வேலனின் வெறியாட்டுக் களம்

முருகனை வழிபடும் நோக்கில் வேலன் புனையும் வெறியயற் களம் அழகுறப் பேசப்பட்டுள்ளது. மணற்பரப்பில் புன்க மலர்கள் உதிர்ந்து பரவிக்கிடந்தன. இதனைக் கண்ட கோப்பெருஞ் சோழனுக்குச் செந்நெல்லும் வெண்பொரியும் சிதறிக்கிடக்கும் முருகன் களமுமே நினைவுக்கு வந்ததை,

**.................................................. முன்றில்**
**நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்**
**வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்**
**செந்நெல் வான்பொரி சிதறி யன்ன (குறுந்.53)**

என்பதால் அறியலாம். கடற்பரப்பில் மணங்கமழும் ஞாழல் மலருடன் புன்னை மலரும் பரவிக்கிடப்பதைக் கண்ட அம்மூவனார் என்னும் புலவருக்கு முருகனை வழிபட அமைந்த அந்த வெறியாட்டுக் களமே நினைவுக்கு வந்துள்ளது. அதை அவரது,

**எறிசுறாக் கலித்த விலங்கு நீர்ப் பரப்பின்**
**நறுவீ ஞாழலொடு புன்னை தாஅய்**
**வெறியயர் களத்தினிற் றோன்றும் (குறுந்.318)**

என்னும் பாடல் சுட்டி நிற்கிறது. இவ்வாறே செந்நெல்லும், வெண்பொரியும் சிதறிக் கிடக்க மணங்கமழ் மலர்கள் யாவும் பரப்பி வைக்கப்பட்டிருக்கும். வெறியாட்டுக் களத்தில் வேலன் வெள்ளிய பனந்தோட்டினைக் கடம்ப மலரோடு சூடி, கழற்காயை உடம்பில் அணிந்துகொண்டு முருகக் கடவுளின் பெரும் புகழினைத் துதித்து, படிமக் கலத்தைக் கையில் தூக்கிக்கொண்டு

முருகன் தன் குறையைக்களைய வேண்டுமென்று வேண்டியதை,

**பொய்ய மரபின் ஊர் முது வேலன்**
**கழங்கு மெய்ப் படுத்து கன்னம் தூக்கி**
**முருகு என மொழியும் (ஐங்.245:1-3)**

என்னும் பாடல் குறிப்பிடுகிறது.

வெறியாட்டு எடுக்குங்கால் தலைவியின் நோயினைப் போக்க ஒரு படிமம் செய்து கழற்சிக்காய் இரண்டினை இரண்டு கண்களாய்ப் பதித்து வேலனிடம் கொடுக்க அவன் அதனைத் தூக்கிக்கொண்டு வெறியாடியதாகத் தெரிகின்றது.

### குறிபார்த்தல்

தலைவி தலைவனுக்காக ஏங்குகிறாள் அவள் உடல் மெலிவதால் அவளுடைய வேறுபாட்டிற்குக் காரணம் கண்டுகொள்ளத் தலைவியின் தாய் கட்டு பார்ப்பதற்கோ அல்லது கழங்கு பார்ப்பதற்கோ ஏற்பாடு செய்கிறாள். முதுபெண்டிர் நெல்லை வைத்துக் குறி கூறும் சடங்கு 'கட்டுக்குறி' ஆகும். 'கழங்குக்குறி' வேலனால் நடத்தப்படும் சடங்கு ஆகும். இந்த இரண்டு சடங்குகளிலும் தலைவியை முருகன் அணங்கினதைக் கண்டுபிடித்து அதற்குத் தெய்வ சாந்தியான வெறியாடலைத் தலைவியின் தாய் ஏற்பாடு செய்கின்றாள்.

முருகன் செம்முது பெண்டிர் மேல் ஆவேசித்துக் குறிப்பு உணர்த்துவான் என்று நம்பினர்.

**நல்நுதல் பரந்த பசலை கண்டு அன்னை**
**செம்முது பெண்டிரோடு நெல்முன் நிறீஇ**
**கட்டின் கேட்கும் (நற்.288)**

என்னும் பாடலடிகள் இதற்குச் சான்றாகும். 'கட்டு' கேட்கும் கட்டுவிச்சி குறப்பெண்ணாக இருப்பாள். இவளுடைய தொழில் குறி சொல்லுதல் ஆகும். இவளையே 'அகவன் மகள்' என்று சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன.

### கட்டுப்பார்த்தல்

கட்டுப்பார்த்தல் என்பது முறத்தில் நெல்லை வட்டமாகப் பரப்பி வைத்துத் தெய்வங்களைப் பாடி எண்ணிப் பார்த்துக் கட்டுவிச்சி காணும் குறியாகும். கட்டுவிச்சி மேல் முருகன் ஆவேசப்பட்டு வருவது உண்டு. கழங்கின் வழியாகக் குறி சொல்பவன் பெயர் வேலன். இவன் முருகனின் பூசாரியாவான். இவன் படிமத்தான் என்றும் அழைக்கப்பட்டான். முருகன் தலைவியைப் பற்றியுள்ளதைக் கழங்கின் மூலமாகக் கண்டுபிடித்து வேலன் கூறுவான். தலைவியின் தாய் வேலனை அழைத்து வெறியாடுதலுக்கு ஏற்பாடு செய்வாள். தலைவிக்குற்ற நோயை அன்னை அறிதற்குக் கழங்கிட்டுப் பார்த்தல் அக்கால வழக்கு. கழங்கு என்பது, கழற்ச்சிக்காய் வித்துக்கள் பலவற்றை முருகன் முன்போட்டு வேலன் தன் தலையடில் ஆடை அணிந்து, கையில் கோல் ஒன்று ஏந்தி, அக்கோலால் கழற்சி வித்துக்களை வாரி எடுக்கும்போது குறிப்புக் காணும் ஒருவகைக் குறி. நற்சிற்றூரில் உள்ள முதிய வேலன் கழங்கை இட்டுத் தலைவியின் இந்த நோய்க்குக் காரணம் முருகனே என்று கூறுவாள். இதை அறிந்த தாய் வெறியாடல் நடத்த வேண்டும் என்று கூறுவாள். இதைத் தலைவன் அறிந்து திருமணம் செய்ய வருவான் என்று வேலன் குறிபார்த்தல் மூலமாக அறியமுடிகிறது.

முருகனால் நோய் வந்ததென்று வேலன் கூறித் தான் கூறிய சொற்களால் கேட்டாரை வளைத்துக் கொண்டு வாத்தியங்கள் முழங்க, கார் மலர்க் குறிஞ்சிப் பூ சூடி, கடம்பு சூடிய முருகனைத் தன் மெய்க்கண்ணே நிறுத்தி வழிபட்டான் என்று தொகை நூல்கள் கூறியுள்ளன. 'வேலன்' என்னும் சொல் முருகனுக்கு வழிபாடியற்றுவோனைக் குறித்து நின்றது. காதலனோடு கலந்த தலைவியின் வேறுபாடு கண்ட அன்னை வேலனை அழைத்து வெறியாட்டு எடுப்பாள். வெறியுடன் ஆடும் வேலனின் மேனியில் முருகன் நிற்பதாகக் கருதிய சங்ககால மக்களின் நம்பிக்கையை உணர முடிகின்றது.

## தொகுப்புரை

சங்க காலத்தில் குறிஞ்சி நில மக்களிடையே வெறியாட்டு என்னும் கூத்து இருந்தது; வெறியாட்டு நடத்தி முருகனை வழிபடும் சூழலை அமைத்தனர். அது வெறியாடு களம் என்று வழங்கப்பட்டது. கட்டுவிச்சியை அழைத்துக் குறிபார்க்கும் பழக்கமும் கழற்சிக்காய் கொண்டு குறிபார்த்தனர் என்பதும் அறிய முடிகின்றன.